ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் -2020/2021

-----------------------------------------------------------------------

## 1.1 அபிப்பிராயம்

ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் (“கம்பனி”) 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனியின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக தொகுதியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- கம்பனி ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி செயற்படுகின்றதா எனவும்,

- கம்பனி தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனம் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

## 1.6 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபார வருமதிகள் ரூபா 6,258 மில்லியன் ஆகும். அதில், 99 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 6,200 மில்லியன் தொகையொன்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிடமிருந்து பெறவேண்டியிருந்தது. மேலும், மேற்குறித்த மீதியில் ரூபா 5,919 மில்லியன் தொகை தீர்க்கப்படாது ஒரு ஆண்டிற்கு மேலாகவிருந்தது. மேலும், 2021 மார்ச் 31 இல் உள்ளவாறு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிடமிருந்து பெறவேண்டியிருந்த மீதி கம்பனியின் | கம்பனியின் முகாமைத்துவமானது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிடமிருந்து அத்தகைய மீதிகளை அறவிடும் செய்முறையிலுள்ளது. | ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிடமிருந்து பெறவேண்டியவை அறவிடப்பட வேண்டும். |

மொத்தச் சொத்துக்களின் 64 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 9,675 மில்லியன் ஆகும். மேலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் நிதிப் பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு போன்றவற்றிடமிருந்தான ஆறுதல் கடிதங்களானது குறிப்பிடப்பட்ட மீதியின் நிர்ணயித்து அறவிடுவதற்காக வழங்கப்பட்டிருந்தது. எனினும், வருமதிகளிற்கான காலக்கழிவானது வாழ்க்கை நேர எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களை தீர்மானிப்பதில் ஏற்பாட்டு அட்டவணையை பயன்படுத்தி எஸ்எல்எவ்ஆர்எஸ் 09 இற்கு இணங்க கணக்குகளில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 1.7 தகவல் தொழில்நுட்ப பொதுக் கட்டுப்பாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பேரிடர் மீட்பு (DR) தளம் கம்பனியால் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. DR தளம் இல்லாதது, பேரழிவு தரும் தரவு இழப்பு சம்பவத்தின் அபாயத்தை அதிகரிக்கிறது அல்லது நிறுவனத்தை முடக்கக்கூடிய வேலையில்லா காலத்தை அதிகரிக்கிறது. | கம்பனி SLC இற்கான செலவு குறைந்த DR தீர்வை மதிப்பிடும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது. எனினும், அரசாங்க செலவினங்கள் குறித்து வெளியிடப்பட்ட புதிய பொது சுற்றறிக்கை காரணமாக இது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | கம்பனி DR தீர்வை அமுல்ப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | தகவல் பாதுகாப்பு (IS) கொள்கை மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) இறுதி பயனர் பாதுகாப்புக் கொள்கை சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் ஒரு குறிப்பிடத்தக்க காலத்திற்கு வரைவு நிலையில் இருந்தது. | IT கொள்கை மற்றும் செயன்முறை ஆவணம் குழு IT ஆல் மதிப்பாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசாங்க செலவினங்கள் குறித்து வெளியிடப்பட்ட புதிய பொது சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு உட்பட்டு கணக்காய்வு குழு/ சபையிடம் இருந்து தேவையான அங்கீகாரங்கள் பெறப்படும். | IS கொள்கை மற்றும் ICT இறுதிப் பயனர் பாதுகாப்புக் கொள்கை சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும், மேலும் அது மதிப்பாய்வு செய்யப்பட்டு தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

கம்பனியின் தொழிற்பாடுகளானது முன்னைய ஆண்டிற்கான ரூபா 4,763 மில்லியன் இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 903 மில்லியன் தேறிய நட்டமொன்றை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 5,666 மில்லியன் பின்னடைவொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் விமான சமையலறை வருமானம் ரூபா 7,209 உடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 473 மில்லியன் இற்கு அவ் வருமானம் குறைவடைந்தமை இந்த பின்னடைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 நிதிசார் பகுப்பாய்வு

2017/18 ஆம் ஆண்டு தொடக்கம் 2020/21 ஆம் ஆண்டுவரையான கம்பனியின் பெறுமதிச் சேர்க்கை படிப்படியாக குறைவடைந்திருந்தது. அதற்கான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(ரூபா.மில்லியன்)**

| **விபரம்** | **2020/21** | **2019/20** | **2018/19** | **2017/18** | **2016/17** |
|---|---|---|---|---|---|
| வரிக்கு பின்னரான இலாபம் (பங்கிலாப கொடுப்பனவின் முன்னர்) | (903.40) | 4,759.51 | 5,602.50 | 3,890.30 | 3,736.39 |
| **சேர்ப்பனவு:-** | | | | | |
| ஊழியர் சம்பளம் | 948.52 | 1,202.97 | 1,128.26 | 1,019.78 | 890.15 |
| அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் (நேரில்) | | | | | |
| முன்னுரிமைப் பங்குகள் | 16.40 | 130.10 | 130.10 | 130.10 | 130.10 |
| சாதாரண பங்குகள் | 3,569.63 | 1,701.25 | 3280.18 | 5,314.10 | 3,093.48 |
| அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரி | | | | | |
| என்பீரீ | - | 0.41 | 0.55 | 0.16 | 0.58 |
| வற் | 2.59 | 7.64 | 13.55 | 11.42 | 13.13 |
| ஏனைய தீர்வைகள் - ஈஎஸ்சீ | - | 33.95 | 48.79 | 41.99 | 34.73 |
| பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு | 449.72 | 377.72 | 218.33 | 196.55 | 284.67 |
| **மொத்தம்** | **4,083.45** | **8,213.54** | **10,422.25** | **10,604.41** | **8,183.24** |

கம்பனியின் பெறுமதிச்சேர்க்கையானது இலாபம் மற்றும் சாதாரண பங்குகள் மீதான பங்குலாபம் அதிகரித்தமையால் 2017/2018 வரையிலும் படிப்படியாக அதிகரித்தது. எனினும், சாதாரண பங்குகள் மீதான பங்குலாபம் குறைவடைந்தமையால் 2018/19 இலிருந்து 2019/20 இற்கு குறைவடைந்ததுடன் கொவிட் - 19 நிலைமையால் இலாபம் குறைவடைந்தமையால் மீளாய்வாண்டின் போது மேலும் இது குறைவடைந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

ஐந்து வருடங்களுக்கான மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் முக்கிய விகிதங்கள் பின்வருமாறுள்ளது.

| | 2020/21 | 2019/20 | 2018/19 | 2017/18 | 2016/17 |
|---|---|---|---|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்களிற்கான நடைமுறைச் சொத்துக்கள் (தடவைகளின் எண்ணிக்கை) | 16.67 | 6.16 | 7.82 | 6.44 | 8.76 |
| விரைவு விகிதம் | 16.26 | 6.01 | 7.55 | 6.14 | 8.46 |
| கடன் உரிமை மூலதன விகிதம் | 0.19 | 0.14 | 0.21 | 0.26 | 0.19 |
| ஈபிஎஸ் - பங்கொன்றிற்கான உழைப்பு | (0.96) | 5.06 | 5.96 | 4.14 | 3.97 |
| பங்கொன்றிற்கான பங்குலாபம் | - | 3.80 | 4.47 | 3.10 | 3.38 |
| மொத்த எல்லை | 53% | 81% | 79% | 77% | 77% |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல | (12%) | 39% | 59% | 58% | 46% |
| பங்குதிரும்பல் விகிதம் | 1.33 | 5.19 | 5.99 | 6.35 | 6.22 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீட்கக்கூடிய முன்னுரிமைப்பங்கிற்கானது நூறு சதவீதத்தால் குறைவடைந்தமை மற்றும் வியாபார செலுத்தவேண்டியவைகள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் குறைவடைந்தமையால் பிரதானமாக நடைமுறைப்பொறுப்புக்கள் குறைவடைந்தமையால் நடைமுறைப் பொறுப்புக்களிற்கான நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவு விகிதம் மீளாய்வாண்டின் போது அதிகரித்தது.

(ஆ) கம்பனியானது வரிக்குப் பின்னரான நட்டத்தை ஏற்படுத்தியமை காரணமாக பங்கொங்கிற்கான உழைப்பு முறையே ரூபா 6.02 ஆல் குறைவடைந்து எதிர்மறையான 0.96 வரையிலும் குறைவடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது மந்தமான விற்பனைகளால் இருப்பு புரள்வு விகிதம் 74 சதவீதத்தால் குறைவடைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

விமான சமயலறைகளை பராமரித்தல் மற்றும் செயற்படுத்துதல், விமானப் பிரயாணிகளால் வேண்டப்பட்டவாறு உணவுகள், பானங்கள் மற்றும் அத்தகைய ஏனைய உணவுப்பொருட்களை வழங்குதல் தொடர்பான வணிகத்தை மேற்கொள்ளுதல், விமானங்களிற்காக பிரயாணிகள் காத்திருக்கும் இடங்களை செயற்படுத்துதல், பண்டகசாலைகள், இணைந்த களஞ்சியங்கள் போன்றவற்றை பெற்று வழங்குதல் மற்றும் சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவகங்கள் போன்றவற்றின் உரிமையாளர்களாக வணிகத்தை மேற்கொள்ளுதல் என்பன கம்பனியின் நோக்கங்களாக உள்ளன. கம்பனியின் ஒவ்வொரு உற்பத்திப் பிரிவினதும் விற்பனை வருமானம் மற்றும் இலாபம் / (நட்டம்) கடந்த மூன்று வருடங்களில் பின்வருமாறு உள்ளன.

| வருமான மூலம் | 2020/21 | | 2019/20 | | 2018/19 | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த வருமானம் | ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்) | மொத்த வருமானம் | ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்) | மொத்த வருமானம் | ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்) |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| விமான சமையலறை | 475.80 | (713.66) | 7,219.43 | 4,101.20 | 7,825.30 | 4,799.99 |
| பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம | 87.05 | (126.83) | 1,219.99 | 435.29 | 1,266.32 | 545.76 |
| வனிலா பொட் | 49.31 | 11.15 | 34.00 | 7.16 | 31.88 | 6.96 |
| செமொண்டு உணவகம் | 8.25 | (4.14) | 25.48 | 11.11 | 38.60 | (6.05) |
| ட்ரான்சிற் ஹோட்டல் | (1.08) | (35.86) | 173.76 | 49.17 | 174.58 | 67.80 |
| எமிரேட்ஸ் லோன்ஞ் | 22.76 | 6.03 | 128.33 | 65.21 | 140.23 | 73.56 |
| மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய (எம்ஆர்ஐஏ) உணவகம் | 24.36 | (2.21) | 7.5 | (1.96) | 12.8 | (15.47) |
| லோன்றி | 9.86 | (34.65) | 227.75 | 92.33 | 259.95 | 129.96 |
| புறோசின் உணவு (புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது) | 17.70 | (3.24) | - | - | - | - |
| மொத்தம் | 694.01 | (903.41) | 9,036.24 | 4,759.51 | 9,749.66 | 5,602.51 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலைய (எம்ஆர்ஐஏ) உணவகம் ஆரம்பத்திலிருந்து நட்டமடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது அது தொடர்பாக ரூபா 1.96 மில்லியன் மற்றும் ரூபா 2.21 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் மீளாய்வாணடிறடகான நட்டம் ரூபா 0.25 மில்லியனால் அதிகரிக்கின்றது.

(ii) புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட புறோசின் உணவு மீளாய்வாண்டின் போது ரூபா 3.24 மில்லியன் நட்டத்தை ஏற்படுத்தியது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

-----------------------------------------------------

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் அறிந்திருக்காததன் காரணமாக அதன் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பான இலக்குக் கட்டங்கள் மற்றும் அத்தகைய இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகள் எனபவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆமைச்சால் கம்பனியானது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.. எனினும், கம்பனியானது தலைமைக்கம்பனியுடன் (ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்) உடன் சேர்ந்து தொகுதியாக நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் ஈடுபடுகிறது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காண்பதற்கும் அத்தகைய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |